## யூன்– 03 – பொதுக்கால 9ம் ஞாயிறு

### இயேசுவின் திரு உடல் திரு இரத்தப் பெருவிழா

### ஆண்டவர்தம் அன்பர்களின் சாவு அவரது பார்வையில் மிக மதிப்புக்குரியது. திபா. 116:15

### முதல் வாசகம் : விடுதலைப் பயணம் : 24 : 3 – 8

அக்காலத்தில், மோசே மக்களிடம் வந்து ஆண்டவர் சொன்ன அனைத்து வார்த்தைகளையும் விதிமுறைகளையும் அறிவித்தார். மக்கள் அனைவரும் ஒரே குரலாக "ஆண்டவர் கூறிய வார்த்தைகள் அனைத்தையும் நாங்கள் செயல்படுத்துவோம்" என்று விடையளித்தனர். மோசே ஆண்டவரின் வாக்குகள் அனைத்தையும் எழுதி வைத்தார். அதிகாலையில் அவர் எழுந்து மலையடிவாரத்தில் ஒரு பலிபீடத்தையும், இஸ்ரயேலின் பன்னிரண்டு குலங்களுக்காகப் பன்னிரண்டு தூண்களையும் எழுப்பினார். அவர் இஸ்ரயேல் மக்களின் இளைஞர்களை அனுப்பி வைக்க, அவர்களும் ஆண்டவருக்கு எரிபலிகள் செலுத்தினர். மாடுகளை நல்லுறவுப் பலிகளாகவும் ஆண்டவருக்குப் பலியிட்டனர்.மோசே இரத்தத்தில் ஒரு பாதியை எடுத்துக் கலங்களில் விட்டு வைத்தார். மறு பாதியைப் பலிபீடத்தின் மேல் தெளித்தார்.அவர் உடன்படிக்கையின் ஏட்டைஎடுத்து மக்கள் காதுகளில் கேட்கும்படி வாசித்தார். அவர்கள், "ஆண்டவர் கூறிய அனைத்தையும் நாங்கள் செயல்படுத்திக் கீழ்ப்படிந்திருப்போம்" என்றனர்.அப்போது மோசே இரத்தத்தை எடுத்து மக்கள்மேல் தெளித்து, "இவ்வனைத்து வார்த்தைக்குமிணங்க, ஆண்டவர் உங்களோடு செய்துள்ள உடன்படிக்கையின் இரத்தம் இதோ" என்றார்.

**பதில்பாடல் :** மீட்பின் கிண்ணத்தைக் கையிலெடுத்து ஆண்டவரின் பெயரைத் தொழுதிடுவேன்.

### இரண்டாம் வாசகம் : எபிரேயர் 9 : 11 – 15

சகோதர சகோதரிகளே! அக்காலத்தில், மோசே மக்களிடம் வந்து ஆண்டவர் சொன்ன அனைத்து வார்த்தைகளையும் விதிமுறைகளையும் அறிவித்தார். மக்கள் அனைவரும் ஒரேகுரலாக் "ஆண்டவர் கூறிய வார்த்தைகள் அனைத்தையும் நாங்கள் செயல்படுத்துவோம்" என்று விடையளித்தனர். மோசே ஆண்டவரின் வாக்குகள் அனைத்தையும் எழுதிவைத்தார். அதிகாலையில் அவர் எழுந்து மலையடிவாரத்தில் ஒருபலிபீடத்தையும், இஸ்ரயேலின் பன்னிரண்டு குலங்களுக்காகப் பன்னிரண்டு தூண்களையும் எழுப்பினார். அவர் இஸ்ரயேல் மக்களின் இளைஞர்களை அனுப்பி வைக்க, அவர்களும் ஆண்டவருக்கு எரிபலிகள் செலுத்தினர். மாடுகளை நல்லுறவுப் பலிகளாகவும் ஆண்டவருக்குப் பலியிட்டனர். மோசே இரத்தத்தில் ஒருபாதியை எடுத்துக் கலங்களில் விட்டுவைத்தார். மறுபாதியைப் பலிபீடத்தின் மேல் தெளித்தார். அவர் உடன்படிக்கையின் ஏட்டைஎடுத்து மக்கள் காதுகளில் கேட்கும்படி வாசித்தார். அவர்கள், "ஆண்டவர் கூறிய அனைத்தையும் நாங்கள் செயல்படுத்திக் கீழ்ப்படிந்திருப்போம்" என்றனர். அப்போது மோசே இரத்தத்தை எடுத்து மக்கள்மேல் தெளித்து, "இவ்வனைத்து வார்த்தைக்குமிணங்க, ஆண்டவர் உங்களோடு செய்துள்ள உடன்படிக்கையின் இரத்தம் இதோ" என்றார்.

### நற்செய்தி : மாற்கு 14 : 12 – 16, 22 - 26

புளிப்பற்ற அப்ப விழாவின் முதல் நாள் வந்தது. பாஸ்கா ஆட்டுக்குட்டியைப் பலியிடும் அந்நாளிலே இயேசுவின் சீடர், "நீர் பாஸ்கா விருந்துண்ண நாங்கள் எங்கே சென்று ஏற்பாடு செய்ய வேண்டும் என விரும்புகிறீர்?" என்று கேட்டார்கள்.அவர் பின்வருமாறு கூறி, தம் சீடருள் இருவரை அனுப்பினார் "நீங்கள் புறப்பட்டு நகருக்குள் செல்லுங்கள். மண்குடத்தில் தண்ணீர் சுமந்துகொண்டு ஓர் ஆள் உங்களுக்கு எதிரே வருவார். அவர் பின்னே செல்லுங்கள்.அவர் எந்த வீட்டுக்குச் செல்கிறாரோ, அந்த வீட்டின் உரிமையாளரிடம், "நான் என் சீடர்களோடு பாஸ்கா விருந்து உண்பதற்கான என் அறை எங்கே?" என்று போதகர் கேட்கச் சொன்னார்" எனக்கூறுங்கள்.அவர் மேல்மாடியில் ஒரு பெரிய அறையைக் காட்டுவார். அது தேவையான வசதிகளோடு தயார் நிலையில் இருக்கும். அங்கே நமக்கு ஏற்பாடு செய்யுங்கள்."சீடர்கள் சென்று, நகரை அடைந்து, தங்களுக்கு அவர் சொல்லியவாறே அனைத்தையும் கண்டு பாஸ்கா விருந்துக்கு ஏற்பாடு செய்தார்கள்.அவர்கள் உண்டு கொண்டிருந்த பொழுது அவர் அப்பத்தை எடுத்து, கடவுளைப் போற்றி அதைப்பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து, "இதைப் பெற்றுக் கொள்ளுங்கள் இது எனது உடல்" என்றார்.பின்பு அவர் கிண்ணத்தை எடுத்துக் கடவுளுக்கு நன்றி செலுத்தி அவர்களுக்குக் கொடுத்தார். அனைவரும் அதிலிருந்து பருகினர்.அப்பொழுது அவர் அவர்களிடம், "இது எனது உடன்படிக்கையின் இரத்தம் பலருக்காகச் சிந்தப்படும் இரத்தம்.இனிமேல் இறையாட்சி வரும் அந்நாளில்தான் நான் திராட்சைப்பழ இரசத்தைக் குடிப்பேன் அதுவரை ஒருபோதும் குடிக்கமாட்டேன் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்" என்றார்.அவர்கள் புகழ்ப்பாடல் பாடிவிட்டு ஒலிவமலைக்குச் சென்றார்கள்.

**தியானம்:** ஆண்டவர் இயேசுவின் திரு உடல், திரு இரத்தப் பெருவிழா தமது திருவுடலையும் திரு இரத்தத்தையும் எமக்காக உவந்தளித்த ஆண்டவர் இயேசுவின் தியாகச்செயலுக்கு ஈடாக எதை மனமுவந்து கொடுக்கின்றோம்? அல்லது கொடுத்துள்ளோம் என வேறுவிதமாகச் சிந்திக்க அழைக்கின்றது. உடல் ஒருவரது மனித ஆளுமையின் வெளிப்படையான அடையாளமாகக் கருதப்பட்டாலும், அதே உடலில் மனம், ஆன்மா என்பவை மறைந்துள்ளன. மனித உடல் இறைவனுக்கு அர்ப்பணம் செய்ய மிகச்சிறந்த காணிக்கையென இறையியல் வல்லுனர்கள் கருதுகின்றார்கள். நமதாண்டவர் இயேசுவும் தம்முடலை எல்லாம் வல்ல இறைவனுக்காகவும், நமக்காகவும் கையளித்தாரென பரிசுத்த வேதகாமம் தெரிவிக்கின்றது. இரத்தம் எனப்படுவது உயிரின் ஆதாரம். இரத்தம் சிந்துதல் தியாகத்தின் அடையாளம். "இரத்தம் சிந்துதலின்றிப் பாவமன்னிப்பு இல்லை" (எபிரேயர் 9:22) என்று புனித பவுலடிகள் தெரிவிக்கின்றார். ஆண்டவர் இயேசு கல்வாரியில் கழுமரத்தில் சிந்திய விலை மதிப்பற்ற பரிசுத்த திரு இரத்தத்தால் நாமனைவரும் பாவத்திலிருந்து கழுவப்பட்டுள்ளோம் என்பது எமது விசுவாசப் படிப்பினையாகவுள்ளது. நற்கருணை என்பது ஆண்டவர் இயேசு அருளடையாள முறையில் நமக்காக எந்நாளும் பிரசன்னமாகியிருக்கின்றார் என்பதனை நினைவுகூருகின்ற நிகழ்ச்சியாகும். நற்கருணைக் கொண்டாட்டத்தின்போது நாம் கடவுளின் குடும்பமாக, கிறிஸ்துவின் உடலாக மாறுகின்றோம். நாம் உட்கொள்கின்ற அப்பமும், பருகுகின்ற இரசமும் ஆண்டவர் இயேசுவோடு நம்மை இணைப்பது மட்டுமல்ல, எல்லாம் வல்ல பரம்பொருளான பரலோக தகப்பனது வாழ்வில்இணைந்து ஒன்றிப்பதால் நாம் ஒருவர் ஒருவரோடு சகோதர அன்பில் இணைவதற்கும் வழியாகிறது என விசுவசிக்கின்றோம். எமக்காகத் தம்மையே கையளித்த இயேசுவைப்போல நாமும் அடுத்தவருடைய வாழ்வு நலமடைய நம்மையே பலியாக்குவதற்கு நற்கருணை முன்னடையாளமாகவும், திருப்பலி புதுவாழ்வுக்குத் தூண்டுகின்ற சக்தியாகவும் மாறவேண்டும். அதே சகோதர உறவு எமது மத்தியில் வாழப்படுகின்றதா? பிறர்வாழ நாம் இரத்தத்தைச்சிந்தி உடலைக் கையளிக்காவிட்டாலும் - பிறர்வாழ சிறு தியாகங்களாவது செய்ய முன்வருவோம்..